**செ. கு. எண்**: 36 **நாள்**:02.02.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 2.2.2013

தேனி மாவட்டம், கண்டமனூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.மலைச்சாமி அவர்கள் 5.1.2013 அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தருமபுரி மாவட்டம், பொம்மிடி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. R.சண்முகம் அவர்கள் 11.1.2013 அன்று ராஜாப்பேட்டை அருகில் ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாநகர காவல், மாதவரம் ஜி.என்.டி ரோடு போக்குவரத்து புலனாய்வு பிரிவில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. மைக்கேல் சேவியர் அவர்கள் 14.1.2013 அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில், மாநில வாத்திய குழுவில், இசைக்குழு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. G.வரதன் அவர்கள் 14.1.2013 அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 15.1.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர காவல் கட்டுப்பாட்டு அறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. அழகர்சாமி அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 17.1.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. R. வேல்முருகன் அவர்கள் 18.1.2013 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், தரமணி காவல் நிலைய குற்றப் பிரிவில் ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. S.P.சிங்கராஜா அவர்கள் 23.1.2013 அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி காலமானார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ராஜேந்திரன் அவர்கள் 27.1.2013 அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி காலமானார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், ஆத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. ஜெயகோபால் அவர்கள் 28.1.2013 தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, அம்புத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் தீயணைப்போர் ஓட்டுநராகப் பணி புரிந்து வந்த திரு. மணிகண்டன் அவர்கள் 29.1.2013 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை ஆய்வாளர் சிங்கராஜா, உதவி ஆய்வாளர் வரதன், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் அழகர்சாமி மற்றும் ஜெயகோபால் தலைமைக் காவலர்கள் மலைச்சாமி, சண்முகம், வேல்முருகன் மற்றும் ராஜேந்திரன், முதல் நிலைக் காவலர் மைக்கேல் சேவியர் மற்றும் தீயணைப்போர் ஓட்டுநர் மணிகண்டன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாரடைப்பால் காலமான காவல் துறை ஆய்வாளர் சிங்கராஜா, உதவி ஆய்வாளர் வரதன், தலைமைக் காவலர்கள் மலைச்சாமி மற்றும் ராஜேந்திரன், முதல் நிலைக் காவலர் மைக்கேல் சேவியர், உடல் நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் அழகர்சாமி மற்றும் தலைமைக் காவலர் வேல்முருகன், சாலை விபத்தில் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயகோபால், தலைமைக் காவலர் சண்முகம் மற்றும் தீயணைப்போர் ஓட்டுநர் மணிகண்டன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**